ISSN:2583-2379



# குர்ஆனில் ஹுத்ஹுத் வரலாற்று நிகழ்வில் நவீன நிர்வாகக் கோட்பாடுகள்: ஓர் பகுப்பாய்வு ஆய்வு

**முனைவர் உஸ்மான் அலி ஹஸனி**
உதவி பேராசிரியர்,
அரபி மற்றும் இஸ்லாமியக் கல்விப் பள்ளி,
பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசென்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை, இந்தியா.

**Dr. S A Usman Ali Hasani**
Assistant Professor,
School of Arabic and Islamic Studies,
B.S. Abdur Rahman Crescent Institute of Science & Technology,
Chennai, India.
Email: usmanali@crescent.education

**அப்துல் கரீம் ஹுதவி**
ஆய்வாளர்,
அரபி மற்றும் இஸ்லாமியக் கல்விப் பள்ளி,
பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசென்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை, இந்தியா.

**Mr. Abdul Kareem Hudawi**
Research Scholar,
School of Arabic and Islamic Studies,
B.S. Abdur Rahman Crescent Institute of Science & Technology,
Chennai, India.
Email: kareemthathram@gmail.com

## *Abstract*

The Holy Qur'an is a divine scripture that guides different aspects of human life. The stories of earlier prophets mentioned in the Qur'an are not only historical accounts but also contain important lessons about knowledge, ethics, leadership, administration, and social life. The story of Prophet Hud-Hud in Surat al-Naml presents several important examples that can be studied from a management and administrative perspective.

This study examines verses 15–40 of Surat al-Naml to identify the relationship between modern management principles and the administrative practices reflected in the narrative of Hud-Hud in Surah Al-Naml. It focuses on important areas such as knowledge, organizational structure, supervision, monitoring and evaluation, communication, decision-making, planning, personnel selection, and delegation of authority.

The study finds that many administrative practices described in the Qur'anic account of Prophet Sulayman (peace be upon him) are consistent, in principle, with concepts found in modern management. The findings suggest that Qur'anic narratives can be studied from a contemporary management perspective and may offer valuable insights for modern administrative thought and practice

**Keywords:**

Holy Qur'an, Hud-Hud, Administration, Management Principles, Leadership, Planning, Communication, Decision-Making.

**சுருக்கம்**

திருக்குர்ஆன் மனித வாழ்வின் பல்வேறு துறைகளுக்கு வழிகாட்டும் இறைவேதமாக விளங்குகிறது. அதில் இடம்பெறும் வரலாற்றுச் சம்பவங்கள் வெறும் வரலாற்றுத் தகவல்களாக மட்டுமல்லாமல், மனித சமுதாயத்தின் அறிவு, ஒழுக்கம், தலைமைத்துவம், நிர்வாகம் மற்றும் சமூக வாழ்விற்கான பல்வேறு வழிகாட்டுதல்களையும் உள்ளடக்கியுள்ளன. குறிப்பாக ஸூரத்துன் நம்லில் இடம்பெறும் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாற்றுச் சம்பவங்கள் நிர்வாகக் கண்ணோட்டத்தில் குறிப்பிடத்தக்க பல அம்சங்களைக் கொண்டுள்ளன.

இவ்வாய்வு, ஸூரத்துன் நம்ல் (15–40) வரையிலான வசனங்களை அடிப்படையாகக் கொண்டு, நவீன நிர்வாகக் கோட்பாடுகளுக்கும் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நிர்வாக நடைமுறைகளில் வெளிப்படும் கொள்கைகளுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்கிறது. குறிப்பாக அறிவு, நிறுவன அமைப்பு, கண்காணிப்பு, ஆய்வு மற்றும் மேம்பாடு, தகவல்தொடர்பு, முடிவெடுத்தல், திட்டமிடல், பணியாளர் தேர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகிய நிர்வாகக் கூறுகள் இவ்வாய்வில் ஆராயப்படுகின்றன.

இவ்வாய்வின் மூலம், நவீன நிர்வாகவியலில் முறையாக வரையறுக்கப்பட்ட பல கொள்கைகளுடன் ஒப்பிடத்தக்க நிர்வாகப் பண்புகள் குர்ஆனில் இடம்பெறும் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாற்றில் காணப்படுகின்றன என்பது விளக்கப்படுகிறது. இதன் அடிப்படையில், குர்ஆனியக் கதைகளை சமகால நிர்வாகவியல் பார்வையில் மறுஆய்வு செய்வதற்கான வாய்ப்பையும் இவ்வாய்வு முன்வைக்கிறது.

**முக்கியச் சொற்கள்:**

திருக்குர்ஆன், ஹுத்ஹுத், நிர்வாகம், நிர்வாகக் கோட்பாடு, திட்டமிடல், தலைமைத்துவம், தகவல்தொடர்பு, முடிவெடுத்தல்.

**அறிமுகம்**

திருக்குர்ஆன் மனித வாழ்வின் அனைத்து முக்கியத் துறைகளுக்கும் வழிகாட்டும் இறைவேதமாகும். மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல், சட்டம், ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான வழிகாட்டுதல்களை அது வழங்குகிறது. குறிப்பாக குர்ஆனில் இடம்பெறும் வரலாற்றுச் சம்பவங்கள் மனிதர்களுக்குப் படிப்பினை, அறிவுரை மற்றும் சிந்தனைக்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.

**அல்லாஹ் கூறுகிறான்:**

نَحْنُ نَقُصُّ عَلَيْكَ أَحْسَنَ الْقَصَصِ بِمَا أَوْحَيْنَا إِلَيْكَ هَٰذَا الْقُرْآنَ

“இந்தக் குர்ஆனை உமக்கு வஹியாக அறிவித்ததன் மூலம் மிகச் சிறந்த வரலாற்றை உமக்கு எடுத்துரைக்கிறோம்.” *(யூஸுஃப்: 3)*

மேலும்:

لَقَدْ كَانَ فِي قَصَصِهِمْ عِبْرَةٌ لِأُولِي الْأَلْبَابِ

“அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது.”

*(யூஸுஃப்: 111)*

இதிலிருந்து குர்ஆனிய வரலாறுகள் மனிதனின் சிந்தனை மற்றும் நடைமுறை வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளன என்பதை அறியலாம். இவ்வகையில் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாறு தனித்துவமான முக்கியத்துவம் பெறுகிறது. அவர்களுக்கு அல்லாஹ் அறிவு, ஆட்சி மற்றும் பல்வேறு சிறப்புத் திறன்களை வழங்கியிருந்தான். அவர்களின் ஆட்சியில் மனிதர்கள், ஜின்கள் மற்றும் பறவைகள் உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. ஹுத்ஹுத் பறவையுடனான அவர்களின் தொடர்பு, ஸபா நாட்டைப் பற்றிய தகவல் பரிமாற்றம், பல்கீஸ் அரசியுடன் நடைபெற்ற தூதரகத் தொடர்பு மற்றும் அரியணையை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் ஆகியவை நிர்வாகக் கண்ணோட்டத்தில் ஆராயத்தக்க பல அம்சங்களைக் கொண்டுள்ளன.

**இவ்வாய்வின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

1. ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாற்றில் வெளிப்படும் நிர்வாகக் கூறுகளை அடையாளம் காணுதல்.
2. ஸூரத்துன் நம்ல் 15–40 வரையிலான வசனங்களை நிர்வாகக் கண்ணோட்டத்தில் ஆராய்தல்.
3. நவீன நிர்வாகக் கோட்பாடுகளுக்கும் குர்ஆனிய நிர்வாகக் கொள்கைகளுக்கும் இடையிலான ஒற்றுமைகளை விளக்குதல்.
4. தலைமைத்துவம், திட்டமிடல், தகவல்தொடர்பு மற்றும் முடிவெடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்தல்.
5. இஸ்லாமிய நிர்வாகச் சிந்தனையை சமகால நிர்வாகவியலுடன் தொடர்புபடுத்துவதற்கான அடிப்படையை உருவாக்குதல்.

**நிர்வாகக் கோட்பாடுகள்**

**நிர்வாகத்தில் அறிவின் முக்கியத்துவம்**

**அல்லாஹ் கூறுகிறான்:**

وَلَقَدْ آتَيْنَا دَاوُودَ وَسُلَيْمَانَ عِلْمًا

“நிச்சயமாக நாம் தாவூதுக்கும் ஸுலைமானுக்கும் அறிவை வழங்கினோம்.”

(அந்நம்ல் : 15)

இவ்வசனம் நிர்வாகத்தில் அறிவின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அறிவும் ஆட்சித் திறனும் பெற்ற தலைவராக விளங்கினார்கள்.

நவீன நிர்வாகவியலிலும் ஒரு நிர்வாகியின் வெற்றிக்கு அறிவு, தகவல், அனுபவம் மற்றும் பகுத்தறிவு ஆகியவை முக்கியமான கூறுகளாகக் கருதப்படுகின்றன.

எனவே, ஒரு தலைவன் தனது துறையின் அறிவைப் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், நிகழ்வுகளை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் சரியான முடிவுகளை எடுக்கக்கூடிய திறனையும் பெற்றிருக்க வேண்டும்.

## நிறுவன அமைப்பு மற்றும் பணிப் பகிர்வு

அல்லாஹ் கூறுகிறான்:

وَحُشِرَ لِسُلَيْمَانَ جُنُودُهُ مِنَ الْجِنِّ وَالْإِنسِ وَالطَّيْرِ فَهُمْ يُوزَعُونَ

“ஸுலைமானுக்காக ஜின்கள், மனிதர்கள் மற்றும் பறவைகளிலிருந்து அவரது படைகள் ஒன்று திரட்டப்பட்டன; பின்னர் அவர்கள் ஒழுங்காக அணிவகுக்கப்பட்டனர்.”

*(அந்நமல் : 17)*

இந்த வசனம் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் ஆட்சியில் காணப்பட்ட **நிறுவன அமைப்பு மற்றும் பணிப் பகிர்வை** வெளிப்படுத்துகிறது.

ஒரு நிறுவனத்தின் செயல்திறனுக்கு பணியாளர்களின் பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியமாகும். ஒவ்வொருவருக்கும் அவர்களின் திறமை மற்றும் தகுதிக்கேற்ற பணியை வழங்குதல் நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு உதவுகிறது.

## கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு

அல்லாஹ் கூறுகிறான்:

وَتَفَقَّدَ الطَّيْرَ فَقَالَ مَا لِيَ لَا أَرَى الْهُدْهُدَ

“அவர் பறவைகளைப் பரிசோதித்தார். பின்னர், ‘ஹுத்ஹுத் எனக்குக் காணப்படவில்லையே?’ என்று கூறினார்.”*(அந்நமல் : 20)*

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது படையில் இடம்பெற்றிருந்த பறவைகளின் நிலையை நேரடியாகக் கண்காணித்தார்கள். ஹுத்ஹுத் காணப்படாததை உடனடியாகக் கவனித்தார்கள்.

இது நிர்வாகத்தில் **கண்காணிப்பு (Control)** என்ற முக்கிய செயல்பாட்டைக் காட்டுகிறது.

ஒரு தலைவன் தன்னிடம் பணிபுரியும் ஊழியர்களின் செயல்பாடுகள், வருகை, பொறுப்புகள் மற்றும் பணியின் முன்னேற்றம் ஆகியவற்றைக் கண்காணிக்க வேண்டும். அதேவேளை, குறைபாடுகள் ஏற்படும் போது அவற்றின் காரணங்களை அறிந்து, நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஆய்வு மற்றும் மேம்பாடு

ஹுத்ஹுத் கூறியது:

أَحَطتُ بِمَا لَمْ تُحِطْ بِهِ وَجِئْتُكَ مِن سَبَإٍ بِنَبَإٍ يَقِينٍ

“நீர் அறியாத ஒரு செய்தியை நான் அறிந்துள்ளேன்; மேலும் ஸபாவிலிருந்து உறுதியான ஒரு செய்தியை உம்மிடம் கொண்டு வந்துள்ளேன்.” *(அந்நம்ல்: 22)*

ஹுத்ஹுத் புதிய தகவலைத் தேடி, புதிய சூழலைக் கவனித்து, அதனைத் தனது தலைவரிடம் எடுத்துச் சென்றது.

இது நவீன நிர்வாகத்தில் **ஆய்வு மற்றும் மேம்பாடு (Research and Development)** என்ற கருத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

ஒரு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு புதிய சிந்தனை, தகவல் சேகரிப்பு, புதுமை மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் முக்கியமானவை.

**தகவல்தொடர்பு**

ஹுத்ஹுத் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் ஸபா நாட்டின் நிலைமையைத் தெளிவாக எடுத்துரைத்தது:

إِنِّي وَجَدتُّ امْرَأَةً تَمْلِكُهُمْ وَأُوتِيَتْ مِن كُلِّ شَيْءٍ

"நிச்சயமாக அப்பெண்மணி அவர்களை ஆட்சி புரிவதை நான் கண்டேன்; இன்னும் அவளுக்கு (தேவையான) ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது"

(அந்நம்ல்: 23)

இது அரசியின் ஆட்சி, அரியணை மற்றும் மக்களின் வழிபாட்டு நிலை ஆகியவற்றைத் தெளிவாகத் தெரிவித்தது. இதிலிருந்து **தகவல்தொடர்பின் (Communication)** முக்கியத்துவத்தை அறியலாம்.

நிர்வாகத்தில் தகவல்கள் சரியான நேரத்தில், தெளிவாக, உண்மையாக மற்றும் சார்பற்ற முறையில் பரிமாறப்பட வேண்டும்.

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ஹுத்ஹுத் வழங்கிய தகவலை உடனடியாக ஏற்றுக்கொள்ளாமல்:

سَنَنظُرُ أَصَدَقْتَ أَمْ كُنتَ مِنَ الْكَاذِبِينَ

(அதற்கு ஸுலைமான்;) "நீ உண்மை கூறுகிறாயா அல்லது பொய்யர்களில் நீ இருக்கிறாயா என்பதை நாம் விரைவிலேயே கண்டு கொள்வோம்" என்று கூறினார்கள்.

(அந்நம்ல்: 27)

இதிலிருந்து தகவலைச் சரிபார்த்த பின்னரே முடிவெடுக்க வேண்டும் என்ற நிர்வாகக் கொள்கையை அறியலாம்.

**வாய்மொழி மற்றும் எழுத்துத் தகவல்தொடர்பு**

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் ஹுத்ஹுத் மூலம் பல்கீஸ் அரசிக்கு கடிதம் அனுப்பினார்கள்:

اذْهَب بِّكِتَابِي هَٰذَا فَأَلْقِهْ إِلَيْهِمْ

*“என்னுடைய இந்தக் கடிதத்தை எடுத்துச் சென்று அவர்களிடம் கொடு.”*

*(அந்நம்ல்: 28)*

இது எழுத்துத் தகவல்தொடர்பு (Written Communication) என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

அதேவேளை ஹுத்ஹுத் தனது தலைவரிடம் நேரடியாகத் தகவல்களைத் தெரிவித்தது **வாய்மொழித் தகவல்தொடர்பு (Oral Communication)** என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

## முடிவெடுத்தல் மற்றும் ஆலோசனை

*பல்கீஸ் அரசி கூறினாள்:*

يَا أَيُّهَا الْمَلَأُ أَفْتُونِي فِي أَمْرِي مَا كُنتُ قَاطِعَةً أَمْرًا حَتَّىٰ تَشْهَدُونِ

*“அமைச்சர்களே! என் விவகாரத்தில் எனக்கு ஆலோசனை வழங்குங்கள். நீங்கள் முன்னிலையில் இல்லாமல் நான் எந்த முடிவையும் எடுப்பதில்லை.”*

*(அந்நம்ல்: 32)*

இவ்வசனம் **ஆலோசனை அடிப்படையிலான முடிவெடுத்தல்** என்ற நிர்வாகக் கொள்கையை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு தலைவர் அனைத்து முடிவுகளையும் தனியாக எடுப்பதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் அனுபவமுள்ளவர்களிடம் ஆலோசனை பெறுவது சிறந்த நிர்வாக முறையாகும்.

## திட்டமிடல்

*ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் கூறினார்கள்:*

أَيُّكُمْ يَأْتِينِي بِعَرْشِهَا قَبْلَ أَن يَأْتُونِي مُسْلِمِينَ

"அவர்கள் என்னிடம் முஸ்லிம்களாக வருவதற்கு முன்பு, அவளுடைய அரியணையை என்னிடம் கொண்டு வருபவர் உங்களில் யார்?" *(அந்நம்ல்: 38)*
இவ்வசனம் ஒரு குறிப்பிட்ட இலக்கை முன்வைத்து அதனை அடைவதற்கான வழிமுறையைத் திட்டமிடுவதை வெளிப்படுத்துகிறது.
எனவே, **திட்டமிடல் (Planning)** என்பது நிர்வாகத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும்.

### பணியாளர் தேர்வு

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தமது படையினரிடம் ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றக்கூடிய நபரைத் தேடுகிறார்கள்.
ஒரு ஜின் கூறுகிறது:

أَنَا آتِيكَ بِهِ قَبْلَ أَن تَقُومَ مِن مَّقَامِكَ وَإِنِّي عَلَيْهِ لَقَوِيٌّ أَمِينٌ

"நீர் உமது இடத்திலிருந்து எழுவதற்கு முன்பே அதை நான் கொண்டு வருகிறேன்; நிச்சயமாக நான் அதற்குச் சக்தியுடையவனும் நம்பிக்கைக்குரியவனுமாவேன்." . *(அந்நம்ல்: 39)*
இதிலிருந்து பணியாளரைத் தேர்ந்தெடுக்கும்போது **திறமை (Competence)** மற்றும் **நம்பகத்தன்மை (Trustworthiness)** ஆகிய இரு பண்புகளும் முக்கியமானவை என்பதை அறியலாம்.

### அதிகாரப் பகிர்வு

வேத அறிவைப் பெற்ற ஒருவர் கூறினார்:

أَنَا آتِيكَ بِهِ قَبْلَ أَن يَرْتَدَّ إِلَيْكَ طَرْفُكَ

"உமது பார்வை உம்மிடம் திரும்புவதற்கு முன்பே அதை நான் கொண்டு வருகிறேன்." *(அந்நம்ல்: 40)*

இங்கு ஒரு பணியைச் செய்வதற்கு உரிய திறன் கொண்ட நபரை அடையாளம் கண்டு, அவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கும் நிர்வாகக் கொள்கையைப் புரிந்துகொள்ள முடிகிறது. இதுவே **அதிகாரப் பகிர்வு / அதிகார ஒப்படைப்பு (Delegation of Authority)** ஆகும்.

ஒரு நிர்வாகி அனைத்து பணிகளையும் தனியாகச் செய்யாமல், பணியாளர்களின் திறமைக்கு ஏற்ப பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

## நவீன நிர்வாகக் கோட்பாடுகளுடன் ஒப்பீடு

| குர்ஆனிய நிர்வாகக் கூறு | நவீன நிர்வாகக் கருத்து | ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் நிகழ்வு |
|---|---|---|
| அறிவு | Knowledge | தாவூத் மற்றும் ஸுலைமானுக்கு வழங்கப்பட்ட அறிவு |
| நிறுவன அமைப்பு | Organization | மனிதர், ஜின், பறவைகள் ஆகியோரின் ஒழுங்கமைப்பு |
| கண்காணிப்பு | Control | ஹுத்ஹுத் காணப்படுகிறதா என ஆய்வு செய்தல் |
| ஆய்வு | Research | ஹுத்ஹுத் ஸபா நாட்டை ஆராய்தல் |
| தகவல்தொடர்பு | Communication | ஹுத்ஹுத் வழங்கிய அறிக்கை |
| எழுத்துத் தொடர்பு | Written Communication | ஸுலைமானின் கடிதம் |
| முடிவெடுத்தல் | Decision Making | பல்கீஸ் அரசியின் ஆலோசனை |
| திட்டமிடல் | Planning | அரியணையை முன்கூட்டியே கொண்டு வரத் திட்டமிடுதல் |
| பணியாளர் தேர்வு | Staffing | திறமைக்கேற்ப நபரைத் தேர்ந்தெடுத்தல் |
| அதிகாரப் பகிர்வு | Delegation | வேத அறிவுடையவரிடம் பணியை ஒப்படைத்தல் |

## விவாதம்

ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாற்றுச் சம்பவங்களை நிர்வாகக் கண்ணோட்டத்தில் ஆராயும்போது, தலைமைத்துவத்தின் பல்வேறு பரிமாணங்கள் வெளிப்படுகின்றன.

முதலாவதாக, ஒரு சிறந்த நிர்வாகியின் அடிப்படைத் தகுதி அறிவு ஆகும். அறிவில்லாத நிர்வாகம் சரியான முடிவுகளை உருவாக்க முடியாது.

இரண்டாவதாக, ஒரு நிறுவனத்தின் செயல்திறனுக்கு ஒழுங்கமைப்பு மற்றும் பணிப் பகிர்வு அவசியம். ஒவ்வொருவரின் திறமைக்கு ஏற்ப பொறுப்புகள் வழங்கப்படும்போது நிறுவனத்தின் செயல்திறன் அதிகரிக்கிறது.

மூன்றாவதாக, கண்காணிப்பு என்பது நிர்வாகத்தில் முக்கியமானதாகும். பணியாளர்களின் செயல்பாடுகளை அறியாமல் நிறுவன இலக்குகளை அடைய முடியாது.

நான்காவதாக, தகவல்தொடர்பு தலைவருக்கும் பணியாளர்களுக்கும் இடையே நம்பிக்கையையும் புரிதலையும் உருவாக்குகிறது.

ஐந்தாவதாக, ஆலோசனை மற்றும் சரிபார்க்கப்பட்ட தகவலின் அடிப்படையிலான முடிவெடுத்தல் நிர்வாகத் தவறுகளைக் குறைக்கிறது.

ஆறாவதாக, திட்டமிடல் மற்றும் அதிகாரப் பகிர்வு ஆகியவை ஒரு நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துகின்றன.

இவ்வாறு பார்க்கும்போது, ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாற்றில் தலைமைத்துவம் என்பது வெறும் அதிகாரப் பயன்பாடாக இல்லாமல், அறிவு, ஒழுங்கமைப்பு, கண்காணிப்பு, ஆலோசனை, தகவல்தொடர்பு, திட்டமிடல் மற்றும் பொறுப்புப் பகிர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான நிர்வாக அணுகுமுறையாக வெளிப்படுகிறது.

## முடிவுரை

திருக்குர்ஆன் மனித வாழ்வின் அனைத்து முக்கியத் துறைகளுக்கும் வழிகாட்டும் இறைவேதமாகும். அதில் இடம்பெறும் வரலாற்றுச் சம்பவங்கள் மனிதர்களுக்கு ஆன்மிக மற்றும் ஒழுக்கப் படிப்பினைகளை மட்டுமல்லாமல், சமூக மற்றும் நிர்வாகப் படிப்பினைகளையும் வழங்குகின்றன.

ஸூரத்துன் நம்லில் இடம்பெறும் ஸுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் வரலாறு இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாய்வின் மூலம் அறிவு, நிறுவன அமைப்பு, கண்காணிப்பு, ஆய்வு மற்றும் மேம்பாடு, தகவல்தொடர்பு, முடிவெடுத்தல், ஆலோசனை, திட்டமிடல், பணியாளர் தேர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற பல நிர்வாகக் கூறுகளை இவ்வரலாற்றில் அடையாளம் காண முடிகிறது.

நவீன நிர்வாகவியலில் இக்கருத்துகள் முறையான கோட்பாடுகளாக பின்னர் வகைப்படுத்தப்பட்டாலும், குர்ஆனிய வரலாறுகளில் அவற்றுடன் ஒத்த நிர்வாகப் பண்புகளும் நடைமுறைகளும் காணப்படுகின்றன.

எனவே, குர்ஆனியக் கதைகளை வெறும் வரலாற்றுச் சம்பவங்களாக மட்டும் அணுகாமல், சமகால சமூக அறிவியல், தலைமைத்துவம் மற்றும் நிர்வாகவியல் ஆகிய துறைகளின் பார்வையிலும் ஆய்வு செய்வது பயனுள்ளதாக அமையும்.

## ஆதார நூல்கள்


- திருக்குர்ஆன்.
- அல்-ஆலூஸி, அபூ அல்-ஃபத்ல் ஷிஹாபுத்தீன் மஹ்மூத் அல்-ஆலூஸி. ரூஹுல் மஆனி. பெய்ரூத்: தார் இஹ்யாஇத் துராஸில் அரபி, 1999.
- அல்-நூரி, அப்துர் ரஹ்மான். அன்வாருல் குர்ஆன். கூத்தாநல்லூர்: ஆதம் பதிப்பகம், 1986.
- நுக்பதுல் உலமா. அத்தஃப்ஸீருல் முஜஸ்ஸர். மதீனா: முஜம்மஃ அல்-மலிக் ஃபஹ்த், 2009.
- இப்னு இப்ராஹீம், ஆதம் ஷமீம். இஸ்தின்பாத்துல் அஹ்காம் மினல் கஸஸில் குர்ஆனி. மலேசியா: சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம், 2009.
- Ratha. Principles of Management. Chennai: Parasanna Publications, 2006.
- Sundaram. Principles of Management. Karaikudi: Sri Meenakshi Publications, 2009.
- இப்னு கதிர். தஃப்ஸீர் அல்-குர்ஆன் அல்-அழீம்.
- அல்-தஃப்ஸீருல் முஜஸ்ஸர்.
- அல்-ஆலூஸி. ரூஹுல் மஆனி.


****